# கௌரவ பீட்டர் டட்ரன் பா.உ
## குடிவரவு மற்றும் எல்லைப்பாதுகாப்பு அமைச்சர்

ஊடக வெளியீடு

2016 பெப்ரவரி 04

### அவுஸ்திரேலியாவின் எல்லைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முழு அளவில் நடைமுறையிலுள்ளன

சட்டவிரோத ஆட்கடத்தலை நிறுத்துவதற்கும் அவுஸ்திரேலியாவின் எல்லைகளின் இறைமையை நிச்சயிப்பதற்குமான அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் மிகக் கடுமையான எல்லைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முழு அளவில் நடைமுறையிலுள்ளன.

அவுஸ்திரேலியாவின் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் பிராந்திய பரிசீலனை நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் எல்லைப்புற இறைமைக் கொள்கையின் முக்கிய அம்சம் இதுவாகும்.

குடிவரவு மற்றும் எல்லைப் பாதுகாப்பு அமைச்சர் பீட்டர் டட்ரன் கருத்து வெளியிடுகையில், மக்கள் கடத்தப்படுவதை தடுப்பது சம்பந்தமாகவும், கடலில் மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதை தடுப்பது சம்பந்தமாகவும் அதன் அர்ப்பணித்த நடவடிக்கையை அவுஸ்திரேலியா தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகிறது.

''கடந்த இரண்டு வருட காலத்தில் எமது நீர் பரப்பிலிருந்து 20 க்கும் அதிகமான படகுகளை அவுஸ்திரேலியா அகற்றியுள்ளது. படகுகள் மூலம் கடத்தப்படும் மக்களை அவர்கள் புறப்பட்ட நாட்டிற்கே திருப்பி அனுப்புவது என்ற கொள்கை தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும்' என்றும் திரு. டட்ரன் கூறினார்.

''அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக படகு மூலம் பயணம் செய்ய முற்படும் மக்களுக்கு மேலதிக தடை என்ற வகையில், நீர்ப்பரப்பின் மேலான விரிவான நடவடிக்கைகளுக்கு அப்பால் பிராந்திய அடிப்படையில் விண்ணப்பங்கள் பரிசீலனை என்பது சம்பந்தமாகவும் அரசாங்கம் தொடர்ந்தும் அர்ப்பணித்துச் செயற்படுகிறது.''

''அவுஸ்திரேலியாவுக்கு படகு மூலம் சட்டவிரோதமாக பயணிக்கும் மக்கள் சம்பந்தப்பட்ட மட்டில் இரண்டு வழிமுறைகளே உள்ளன என்பது, அவர்களுக்கான எனது செய்தியாகும். முதலாவது, அவர்கள் இடைநிறுத்தப்பட்டு அவுஸ்திரேலிய நீர்ப் பரப்பில் இருந்து திருப்பி அனுப்பப்படுவார்கள். இரண்டாவது, விண்ணப்பப் பரிசீலனைக்கென வேறு ஒரு நாட்டிற்கு அவர்கள் அனுப்பப்படுவார்கள் என்பனவாகும்.''

''பரிசீலனை மற்றும் அவுஸ்திரேலியாவின் மீள் குடியேற்றம் என்பன ஒரு போதும் தெரிவுகளாக இருக்க மாட்டா. இதற்கு விதிவிலக்கே கிடையாது. சகலருக்கும் இந்தச் சட்டங்கள் ஏற்புடையதாகும்.''

அவுஸ்திரேலியாவுக்கு வந்து சேரவென மக்களைக் கடத்துவோரின் உதவியைப் பெறுவோர் அவர்களது உயிர் மற்றும் குடும்ப அங்கத்தவர்களின் உயிர்கள் உட்பட சகலதையும் இழக்கும் அபாயத்தை எதிர்நோக்குகின்றனர்.

மேலதிக விபரங்களுக்கு : அமைச்சரின் அலுவலகம் 02 6277 7860